(இ) கஜா புயலால் விளைநிலங்களில் விழுந்த மரங்களை அப்புறப்படுத்துதல்

திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஜா புயல் ஏற்பட்டபோது, மின்சாரக் கம்பிகள் L.T., H.T. Line–களெல்லாம் விளைநிலங்களின் வழியாகச்சென்றுகொண்டிருந்தன. கஜா புயல் ஏற்பட்டபோது, மரங்கள் எல்லாம் முறிந்துவிட்டன. அவற்றை அப்புறப்படுத்தும் அந்தப் பணிகளையெல்லாம் அப்படியே போட்டுவிட்டு, புதிய பணிகளுக்கு மின்சார வாரியப் பணியாளர்கள் சென்றுவிட்டனர். சாலையோரங்களில் மின்கம்பங்களை நட்டு, மின்சாரத்தைக் கொடுப்பதற்கான பணிகளைச் செய்ய அவர்கள் சென்றுவிட்ட காரணத்தினால், விளைநிலங்களில் L.T., H.T. Line–களின் wire–கள், மின் கம்பங்கள் எல்லாம் முறிந்து அகற்றப்படாமல் கிடக்கின்றன. இப்போது விவசாயிகள், மராமத்துப் பணிகளைத் தொடங்கி, உழவுப் பணிகள் மற்றும் விவசாயப் பணிகளைத் தொடங்க வேண்டிய நிலையில் இருக்கிற காரணத்தினால் அந்த மரங்களை அப்புறப்படுத்த அரசு முன்வர வேண்டுமென்று, அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட திருத்துறைப்பூண்டி பகுதியில், கிட்டத்தட்ட 32,000 மின் கம்பங்கள் விழுந்திருந்தன. 1,800 மின் கம்பங்கள் வயல்வெளியில் கிடக்கின்றன. அவற்றையும் உடனடியாக ஒரு மாத காலத்திற்குள் எடுப்பதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்கிறோம். அதேபோல மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். அவருடைய தொகுதியில் 250 மின் கம்பங்கள்தான் எடுக்க வேண்டியிருக்கின்றன. அவற்றையும் கூடிய விரைவில் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம். ஏனென்று சொன்னால், கிட்டத்தட்ட 3,31,772 மின் கம்பங்கள் இந்த 5 மாவட்டங்களில் பாதிக்கப்பட்டன. முதலில் மின்சாரம் கொடுக்க வேண்டும். 66 இலட்சம் மின் இணைப்புகள் பாதிக்கப்பட்டிருந்த காரணத்தினால், புது வழியில், மின்சாரம் கொடுக்க வேண்டுமென்பதற்காக ஏற்கெனவே வயல்வெளியில் இருந்த பழைய மின் கம்பங்களை மாற்றி, சாலை வழியாக இப்போது புது மின்*

கம்பங்கள் போடப்பட்டிருக்கின்றன. பழைய மின் கம்பங்களையெல்லாம் அகற்றிக் கொண்டிருக்கின்றோம். அந்தவகையில் பணிகள் அதிகமாக இருந்த காரணத்தினால் முடியவில்லை. வெள்ளாமை வருகின்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கையை, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கூடிய விரைவில் அந்த மின் கம்பங்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ஜல்லி கிரஷர்கள் இயக்கப்படுவதால் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள். (குறுக்கீடு) இருங்கள், இருங்கள்.

திரு. பி. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூளகிரி ஒன்றியத்தில் அத்திமுகம், வெங்கடேஷ்புரம், புக்கசாகரம், காமன்தொட்டி, கானலட்டி, கொம்மேப்பள்ளி மற்றும் பல ஊராட்சிகளில், சுமார் 60—க்கும் மேற்பட்ட பெரிய, பெரிய ஜல்லி கிரஷர்கள் இயக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பகுதியில் உள்ள ஜல்லி கிரஷர்களின் காரணமாக வரும் தூசு புகைமண்டலமாக மாறி, அப்பகுதியில் உள்ள விவசாய விளைநிலங்களில் உள்ள பயிர்களில் படிந்துவிடுவதால், தக்காளி, கோஸ், பீன்ஸ், வாழை மற்றும் நெல் ஆகிய பயிர்கள் எல்லாம் பாதிப்புக்குள்ளாகி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

மேலும், குவாரிகள் இருக்கும் இடங்களில் வெடிகள் அதிகளவில் வைக்கப்படுவதால், அங்குள்ள வீடுகளில் விரிசல் ஏற்படுகிறது. எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடும், அதேபோல அந்தப் பகுதிகளில் இயங்கிவரும் கிரஷர்களுக்கு தடை விதிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.